வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை - விருதுநகர் மாவட்டம்

சாத்தூர் வட்டம்

அறிவிக்கை எண். 01/2025 நாள்: 21.07.2025

**விளம்பர எண்.01-STR**

அறிவிக்கை

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் காலியாக உள்ள பதினொன்று (11) கிராம உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளது. மேற்படி காலிப்பணியிடங்களுக்கு சாத்தூர் வட்டத்திற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரடியாகவும், அஞ்சல் மூலமாகவும் **21.07.2025 முதல் 19.08.2025 அன்று மாலை 5.45 மணிக்குள்** விண்ணப்பம் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| வாசித்தல் மற்றும் எழுத்து திறனறித்தேர்வு நடைபெறும் நாள் | : | 19.09.2025 (உத்தேசமாக) |
| நேர்காணல் நடைபெறும் நாள் | : | 03.10.2025 (உத்தேசமாக) |
| சம்பளவிகிதம் | : | சிறப்பு காலமுறை ஊதியம் Level 6 (ரூ. 11,100 - 35,100) |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | : | 11 |
| பணிநியமனம் செய்யப்பட உள்ள கிராமங்களின் விவரம் | : | 1. சுப்பிரமணியபுரம்<br>2. மடம்சின்னஓடைப்பட்டி<br>3. பெத்துரெட்டிபட்டி<br>4. சிந்துவம்பட்டி<br>5. அய்யம்பட்டி<br>6. சிந்தப்பள்ளி<br>7. எம்.சொக்கலிங்கபுரம்<br>8. ஆத்திப்பட்டி<br>9. சின்னத்தம்பியாபுரம்<br>10. ஓவநாயக்கன்பட்டி<br>11. கோட்டப்பச்சேரி |

கல்வித்தகுதி

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) சான்றிதழ் தேர்வில் (SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ்

ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும் (குறிப்பு - (SSLC – Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்பிக்க வேண்டும். மேற்படி காலியிடங்கள் கீழ்க்காணுமாறு இனசுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| பிரிவு | பாலினம் | இன சுழற்சி எண். | முன்னுரிமை/ முன்னுரிமை அல்லாதது | வயது (அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று) | காலியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் | பொது | 46 | முன்னுரிமை அல்லாதது (முன்னாள் இராணுவத்தினர்) | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 48 | 1(ஒன்று) |
| | பொது | 53 | முன்னுரிமை | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 35 | 1(ஒன்று) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதவர்) | பெண்கள் | 47 | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 35 | 1(ஒன்று) |
| | பொது | 49, 54 | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 35 | 2(இரண்டு) |
| பொதுப்பிரிவினர் | பெண்கள் | 48 | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 30 | 1(ஒன்று) |
| | பொது | 51 | முன்னுரிமை | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 30 | 1(ஒன்று) |
| | பொது | 55 | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது - 30 | 1 (ஒன்று) |
| பழங்குடியினர் (ST) | பொது | 50 | முன்னுரிமை | குறைந்தபட்ச வயது - 21<br>உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |
| பட்டியல் இனத்தவர் | பெண்கள் | 52 | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது -21<br>உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |
| | பொது | 56 | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது -21<br>உச்சவரம்பு வயது -35 | 1(ஒன்று) |

**(i) முன்னாள் இராணுவத்தினர் :**

ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய பிரிவினைச் சேர்ந்தவர்கள் 53 வயது நிறைவடையாமலும், இதர பிரிவினைச் சேர்ந்தவர்கள் 48 வயது நிறைவடையாமலும் இருக்க வேண்டும்.

**(ii) மாற்றுத்திறனாளிகள் :**

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் 10 ஆண்டுகள் வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.



File No. A-117/27/2024-A8 (Computer No. 628267)
Generated from eOffice by Madhavi, SRI(A8)-ASEC-GEN.REV-COLLR-VNR.DT, SENIOR REVENUE INSPECTOR(A8)_ASEC_GEN.REV_COLLR_VNR.DT, Virudhunagar-VNR-DT.COLLR on 23/07/2025 11:53 am

**(iii) இதர தகுதிகள்/நிபந்தனைகள்:**

- விண்ணப்பதாரர்கள் சாத்தூர் வட்டத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப்படிக்க தெரிந்திருக்கவேண்டும்
- கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 312 வருவாய் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1) துறை, நாள்: 04.06.2025-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி / இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் மற்றும் நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
- இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின், வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்படமாட்டாது. மாறாக இருசக்கரவாகன ஓட்டுநர் உரிமம் இல்லையெனில், வாகனம் ஓட்டும்திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
- பணிநியமனத்தின்போது உடல் தகுதிச்சான்று சமர்ப்பிக்கவேண்டும்.
- இருதார மனைவி உடையவர்களாக இருக்கக்கூடாது மற்றும் வேறு கணவர் / மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்கக் கூடாது.
- தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அழைப்புக்கடிதம் (Calling Letter) பெறுவது மட்டுமே பணிநியமனத்திற்கான ஆணை என கருதப்படமாட்டாது.
- விண்ணப்பப் பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- நேர்காணலின்போது சான்று சரிபார்ப்பிற்கு அசல் சான்றுகள் / ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 19.08.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதற்குப்பின்பு வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- **விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://virudhunagar.nic.in என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

(*அரசாணை (நிலை) எண். 91 மனித வள மேலாண்மை (S) துறை, நாள்: 13.09.2021 ன்படி பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு அனைத்துப் பிரிவினருக்கும் அட்டவணையில் கண்டுள்ள வயது வரம்பிலிருந்து இரண்டாண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது.)

(** அரசாணை (நிலை) எண். 312 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1)) துறை, நாள்: 04.06.2025-ன்படி வாசித்தல் மற்றும் எழுத்துத்திறன் தேர்வு மற்றும் நேர்காணலுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்)

(*** அரசாணை (நிலை) எண். 122, மனித வள மேலாண்மைத் (கே.2) துறை நாள்: 02.11.2021-ன்படி முன்னுரிமை முறை பின்பற்றப்படுகிறது.

(**** அரசாணை (நிலை) எண். 266, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1)) துறை, நாள்: 22.05.2025-ன்படி கல்வி தகுதி குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை எழுதி தேர்ச்சி / தோல்வி அடைந்திருக்கவேண்டும்.

குறிப்பு: கிராம உதவியாளர் நேரடி நியமனம் தொடர்பான கூடுதல் விவரங்களை **https://virudhunagar.nic.in** என்ற இணையதள முகவரி மூலமாகவும், சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

19/7/25

வருவாய் வட்டாட்சியர்,
சாத்தூர்.

19/7/25